மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள் எந்தக் கேள்விக்கும் எந்தவிதமான விடையும் கொடுக்கலாம். அமைச்சரவர்கள் இப்படித் தான் விடையளிக்கவேண்டுமென்று சொல்லக்கூடிய நிலையில்லை. முதல் பகுதியை அனுமதிக்கிறேன் என்று சொன்னேன். மேற்கொண்டு விடை கொடுப்பதை நான் கொடுக்க வேண்டாமென்று சொல்லக்கூடிய நிலையில்லை.

திரு. ஆர். கருப்பையா : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், தலைவரவர்களே, ஆங்கில வினாத்தாளில் 'மினிஸ்டர் ஃபார் எஜுகேஷன் அண்ட் ஹெல்த்' என்றிருக்கிறது. ஆனால் தமிழ் வினாத்தாளில் பொதுப்பணித் துறை அமைச்சர் என்று போட்டிருக்கிறது. இப்படி மொழி பெயர்ப்பு பல இடங்களில் தவறாகவிருக்கிறது. இது மாதிரி தவறுகள் பற்றி நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டரா ?

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, இப்பொழுதிருக்கும் இட வசதியிலே எவ்வளவு பேருக்கு இட வசதி இருக்கிறது. மேற்கொண்டு கட்டடத்தை விஸ்தரிப்புச் செய்யும்பொழுது எவ்வளவு பேருக்கு இடம் அதிகமாகக் கொடுக்கப்படும் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்பொழுது எவ்வளவு பேருக்கு என்ற விவரக்குறிப்பில்லை. ஆனால் 700, 800 பேருக்குமேல் இருக்கிறார்கள் என்று குறிப்பாகச் சொல்லலாம். இட நெருக்கடியை ஓரளவுக்குக் குறைக்க வேண்டுமென்ற முறையில் தான் துணைக்கட்டடங்கள் அமையும். ஒரே ஷிப்டாக வைக்க முழு வசதி ஏற்படும் நிலை இருக்க வேண்டும். நெருக்கடி அதிகமாக இருப்பதால் நெருக்கடியைத் தீர்க்க இந்தத் துணைக் கட்டடம் அமையும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, நெருக்கடி அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி நெருக்கடி அதிகமாக யிருப்பதால் மதுரை போன்ற பகுதிகளில் கல்லூரிகள் நிறுவ ஏதாவது குறிப்பு கையிலிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மதுரையில் ஒரு சட்டக்கல்லூரி துவக்க வேண்டுமென்ற யோசனை கூறப்பட்டிருக்கிறது. அது ஆய்வு நிலையிலேயிருந்து வருகிறது.

Additional buildings for Queen Mary's College.

* 570 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) Whether the construction of additional blocks in the Queen Mary's College in Madras City has been taken up for execution by the Public Works Department; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ): இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. ஒப்பந்தப் புள்ளி விவரங்கள் பெறப்பட்டுள்ளன. அவை சட்டடங்கள் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளன. இப்பணி விரைவில் நிறைவேற்றப்படும்.

திரு என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த இராணி மேரி கல்லூரிக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ? ஆய்விலே உள்ளது என்றால் எப்பொழுது துவக்கப்படும் ? எப்பொழுது டெண்டர் கோரப்படவிருக்கின்றன ?

1970 மார்ச் 28]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, துணைக் கட்டடம் கட்டுவதற்கு 6 இலட்சத்து 80 ஆயிரம் என்றும், மேஜை நாற்காலி போன்ற பொதுநல ஏற்பாடுகளுக்காக, 1 இலட்சசத்து 30 ஆயிரம் என்றும் ஆக மொத்தம் 8 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய்க்கு வரைவுத்திட்டம் போட்டிருக்கிறது. 7 இலட்சம் ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டிருக்கிறது. டெண்டர்கள் கோரப்பட்டிருக்கின்றன. டெண்டர் வந்தவுடன் வேலைகள் துவங்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், கட்டட வேலைகள் என்று சொன்னால் எந்தெந்தவிதமான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன? சென்ற ஒரு வருஷ காலத்தில் இரண்டுமுறை திருடர்கள் அங்கே நுழைந்ததாகவும், அவர்கள் பயந்துபோய் மிகப்பெரிய அளவிற்கு பீதியேற்பட்டிருப்பதும் அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? ஆகவே அந்த காம்பவுண்ட் சுவர்களை உயரமாகக் கட்டும் உத்தேசமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, புதிதாக சில வகுப்புக்களை மேற்கொள்வதற்காக துணைக்கட்டடம் கட்டப் படவிருக்கின்றது. பாதுகாப்பற்ற நிலையில் இருந்ததை மாற்றி கம்பிகள் அடிக்கப்பட்டு, ஹாஸ்டல் மற்ற இடங்களில் நுழைய முடியாத அளவிற்குச் சென்ற ஆண்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதற்குமுன்பு உள்ளே நுழைய வசதியிருந்ததால் திருடர்கள் நுழைய முடிந்தது. இப்பொழுது கம்பிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. எனவே, இங்கு நுழைய வழியில்லை. வேறுவழியிலே நுழைந்தால் முடியுமே தவிர இந்த வழியிலே நுழைய முடியாது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, நாட்டிலே பொதுவாக மக்கள் தொகை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இப்படி மக்கள் தொகை அதிகரிப்பதால் எலிமெண்டரி பள்ளிகளிலேயிருந்து கல்லூரிகள் வரை மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் இடம் கிடைப்பது மிகவும் கஷ்டமாகயிருக்கிறது. எனவே, அரசாங்கம் எல்லாத் துறைகளிலும் இரண்டுவேளை படிப்பை, ஷிப்ட் சிஸ்டத்தை கொண்டுவர முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி இராணி மேரிக் கல்லூரிக்கு கூடுதலாகக் கட்டடங்கள் பற்றியிருக்கும்பொழுது ஆரம்பப் பள்ளிகள், கல்லூரிகள், ஷிப்ட் சிஸ்டம் என்று கேட்டால் என்ன அர்த்தம்?

திரு. நா. வீராசாமி : க்வீன் மேரிஸ் கல்லூரியில் இடநெருக்கடியிருப்பதால் காலைநேரக்கல்லூரி, மாலைநேரக்கல்லூரி என்று இரண்டு பகுதிகளாகப் பிரித்து ஷிப்ட் சிஸ்டம் கொண்டுவர . . . . . .

திரு. சா. மெய்யப்பன் : தலைவரவர்களே, இராணி மேரிக் கல்லூரியில் கூடுதலாகக் கட்டடம் கட்டவிருப்பதில் விடுதிகளும் சேர்ந்தா அல்லது வகுப்பு அறைகளுக்கு மட்டும்தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வகுப்பு அறைகளுக்கு மட்டும்தான். வகுப்பறைகள் அதிகமாக வேண்டுமென்பதற்காகவும், புதிய புதிய வகுப்புகளுக்கு இட நெருக்கடியிருக்கிற காரணத்தாலும் வகுப்பு அறைகளுக்குத்தான் இந்த துணைக் கட்டடம்.

Additional buildings for Ophthalmic Hospital at Madras.

*571 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the Public Works Department has undertaken the construction of extension blocks to the Ophthalmic Hospital in Madras; and

(*b*) if so, the details thereof?